குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50–2015

அ.சா. 6

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. துரைராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.ஆறுமுகம் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் தற்போது பேரிகை காவல் நிலையம் |
| வயது | : | 51 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 10.03.2026**

**(1 முதல் 8 எதிரிகள் ஆஜர்)**

**கு.வி.மு.ச. பிரிவு 311 கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேரிகை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். பேரிகை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 13/2015 வழக்கு CC.No. 50/2015 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் இவ்வழக்கில் நான்

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் எதிரிகளால் திருடிய செண்டிரிங் சீட்டுகளை எடுத்து செல்ல எதிரிகள் பயன்படுத்திய KA 51 C1109 பதிவு எண் கொண்ட இச்சர் லாரியை முதல் எதிரி ஆஜர் படுத்த புலன்விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் சாவத்திரி அவர்கள் படிவம் 95 மூலம் கணம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட இச்சர் லாரியை அதன் உரிமையாளரான 1ம் எதிரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து CrLMP No. 602/2015 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி பெற்றுக்கொண்டார். இச்சர் லாரியை கைப்பற்றிய படிவம் 95 **அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** படிவத்தில் காணப்படும் வழக்கு சொத்தான லாரி **சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

அ.சா.ஆ.9 படிவத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜரையும் படிவம் 95யும் வழக்கு பொருட்களையும் நான் கைப்பற்றி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில மட்டுமே சாட்சியம் அளிப்பதாலும் வழக்கை பற்றி புலன் விசாரணை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ. 2 இச்சர் லாரியை 1ம் எதிரி போலிசாரிடம் ஆஜர் படுத்தவில்லை என்றாலும் 1ம் எதிரியின் வீட்டில் இருந்த வாகனத்தை போலிசார் பொய்யாக இந்த வழக்கிற்காக கைப்பற்றி சேர்த்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை.</u>

சாட்சி கூறியதை என்னால்
தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால்
தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால்
படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்